வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4792 /ஆ4/2024 நாள்:27.11.2024

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு, ஜனவரி 2025 மாணவர்களின் விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்தல் கால அவகாசம் நீட்டித்தல்– தொடர்பாக |
| பார்வை | : | 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017845/ டி(1)/ /2024 நாள் 26.11.2024<br>2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 27.11.2024<br>3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017845/ டி(1)/ /2024 நாள் 09.12.2024<br>4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 09.12.2024<br>5. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017845/ டி(1)/ /2024 நாள் 18.12.2024 |

===============

பார்வை 5–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி 25.01.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2024–2025 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக 10.12.2024 பிற்பகல் முதல் 18.12.2024 வரை பதிவேற்றும் செய்திட கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது இக்கால அவகாசம் 20.12.2024 வரை நீட்டிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது .

எனவே அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பித்திட தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இணைப்பில் காணும் பள்ளிகள் தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு ஒரு மாணவர்கூட இதுவரை விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்படவில்லை என தெரிய வருகிறது.

விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் : 20.12.2024

தேர்வுக்கட்டணம் Online –இல் செலுத்த வேண்டிய கடைசி நாள், 20.12.2024

பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் (Fees Receipt) வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்: 21.12.2024

மேலும் நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு விண்ணப்பங்களின் விவரங்களை பதிவேற்றம் செய்திட எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனத் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்வரின் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுக்களை சார்ந்த அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தம்வசம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு ஒரு மாணவர் கூட விண்ணப்பிக்காத பள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|
| School Name | school code | block | Mgmt | category |
| GOVT ADW HS MAGAMADHUPURAM | 246VLRE0112 | Anaicut | ADW | HS |
| GOVT HS KALANIPAKKAM | 246VLRE0094 | Anaicut | GOVT | HS |
| GOVT HIGH SCHOOL MOOLAIGATE | 246VLRE0071 | Anaicut | GOVT | HS |
| GHS ARAVATLA | 246VMBI0063 | Pernambut | GOVT | HS |
| GOVT HIGH SCHOOL, PALLALAKUPPAM | 246VMBI0046 | Pernambut | GOVT | HS |
| GOVT HIGH SCHOOL, SATHGAR | 246VMBI0032 | Pernambut | GOVT | HS |
| GHS, MGR NAGAR, PERNAMBUT | 246VMBI0143 | Pernambut | GOVT | HS |
| GOVT HR SEC SCHOOL THORAPADI VELLORE | 246VLRE0080 | Vellore Rural | GOVT | HSS |

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் ,வேலூர் மாவட்டம்.

நகல்:

- அனைத்து அரசு/நகரவை /ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம். (அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் விண்ணப்பித்திட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு )
- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.